# புறநானூற்றில் சிற்பக்கலை

111

**முனைவர் சி. தனலட்சுமி,**
**தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,**
**DMI கல்வியியல் கல்லூரி, சென்னை-600123.**

**ஆய்வுச் சுருக்கம்**

தொடக்க கால மனிதனுக்கு இயற்கைப் பொருள்கள் அனைத்தும்; வியப்பை உண்டாக்கின. உலகத்திற்கு மேலே கவிழ்ந்து நிற்பதைப் போன்று விளங்கும் நீல வானமும், அதனிடத்து தோன்றி நகர்ந்து மறையும் சூரியன், சந்திரன், கோல்கள், விண்மீண்கள் போன்றவையும் கூட்டங் கூட்டங்களாகச் செறிந்தும், வளர்ந்தும், நெகிழ்ந்தும், அழகிட்டுச் செல்லும் மேககூட்டங்களும், தரையில் படர்ந்து அலையொலியுடன் தோன்றும் கடலும், குவிந்து உயர்ந்து படர்ந்து நீண்டு நிற்கும் மலைகளும், மலைத்தொடர்களும், சலசலத்து ஓடும் ஆறுகளும், மரஞ்செடிக்கொடிகளால் நன்கு உயர்ந்து தோன்றும் காடுகளும், முட்டி நிற்கும் உயர்ந்த மரங்களும், எங்கும் திரிந்தும், பறந்தும் வாழும் உயிரினங்களும் காட்சிக்கு வியப்பாகி நிற்கும் புதுமைப் பொருள்களாகவே தோன்றின.

சிற்பக்கலை கண்களால் கண்டு மனத்தால் இன்புறக்கூடியதாகும். சிற்பக்கலை, நுண்கலைகளுள் இரண்டாவதாக அமைகின்றது. ‘கட்டடக்கலையோடு நெருங்கிய தொடர்புடையது சிற்பக்கலையாகும். நம் நாட்டுக் கட்டிட நிபுணர்கள் சிற்பி என்றே அழைக்கப்பெற்றனர். அவர்கள் கட்டிடங்களில் குறிப்பாகக் கோயில்களின் தூண்கள், விதானங்கள், சுவர்கள், கோபுரங்கள் அனைத்திலும் அழகிய சிற்பங்கள் அமைத்தே கட்டியுள்ளனர்”. என்று சங்க இலக்கிய ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

சிற்பக்கலை என்பது உலகிலுள்ள இயற்கைப் பொருள்களின் வடிவத்தையும் உலகில் இல்லாத பொருள்களைக் கற்பனையால் உருவம் கொடுத்தும் அழகுடன் அமைப்பதாகும். ‘சிற்பக்கலையுள் விலங்கு, பறவை, தாவரம் முதலிய உயிர்வகைகள் மிகுதியாக இடம் பெறும்”. இக்கலை கட்டடக் கலையினும் நுட்பம் வாய்ந்தது. இச்சிற்பக் கலையைக் கண்களால் கண்டு, அதன் சிறப்பினை நுண்ணறிவால் உணர்ந்து மகிழலாம்.

**புறநானூற்றில் சிற்பக்கலை**

சங்க இலக்கியங்கள் பெரும்பாலான இலக்கியங்கள் நுண்கலைகளைப் பற்றி பாடியிருந்தாலும், அதனில் குறிப்பாக சிற்பக்கலைப் பற்றி புலவர் பாடல்கள் வழியாக அறிந்தாலும், புறநானூறு இலக்கியம் மற்ற இலக்கியங்களுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கின்றது. புறநானூறு பல சிற்ப வகைகளை புலவர் பாடல்கள் வழியே அறிய முடிகின்றது.

உலோகச்சிற்பம், மரச்சிற்பம், மணற்பாவைச்சிற்பம், நடுகற்சிற்பம் என்று பல நிலைகளில் சிற்பக்கலை புலவர்கள் தங்களது பாடல்கள் வழியே வெளிப்படுத்தியுள்ளனர். அவைகளை இக்கட்டுரையின் வழியாகக் காண்போம்.

**உலோகச்சிற்பம்**

உலோகச்சிற்பம் என்பவை பஞ்சலோகத்தினால் வடிக்கப்படுவனவாகும். ‘கி.பி.7-ம் நூற்றாண்டுகளில் பல்லவமன்னர்களும், பிற்காலச்சேரர்களும் பஞ்சலோகத்தினால் சிற்பங்களை அமைத்தார்கள்"1 கோயில்

மணிகளிலும், விளக்கு வகைகளிலும் உலோகச்சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்க காணலாம். இதனைப் போன்று புறநானூற்று இலக்கியத்திலும் உலோகங்களைப் பற்றி புலவர் பாடல் வரிகளின் வழியாக அறிய முடிகின்றது.

மூவேந்தர்களுள் புலிச்சின்னம் கொண்டவன் சோழன். இவன் காவிரி பாயும் சோழ நாட்டிற்கு உரியவன். இம்மன்னனுக்கு உடன் பிறந்தவன் ஒருவன் உண்டு என்ற அவன் பெயர் சோழன்மாவளத்தான். இம்மன்னன் உறையூரை இடமாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். இம்மன்னனது கொடைத் தன்மையையும், பானர்களது சூழலினையும் முதுகண்ணன் சாத்தனார் பாடுகையில் உலோகச் சிற்பம் பற்றி பாடியுள்ளார்.

நெருப்பில் உருக்கித் தகடாகச் செய்தமைத்த செம்பொன்னாலான தாமரைப் பூக்களை மெல்லியதாக நூல் போட்டு தட்டிய கம்பியிலே கோத்துச் செய்த அழகிய கலைநுட்பத்துடன் அமைந்த அழகிய பொன் மாலைகளைத் தங்களுடைய கரிய பரட்டைத்தலைகளில் அழகுறச் சூட்டியிருக்கும் பாணர்கள் நிறைந்தது நீ நாளும் வீற்றிருக்கும் அரசவை என்று புலவர் உலோகத்தாமல் தாமரைப் பூ வடிவில் அணிகலன்கள் சங்க காலத்தில் செய்து பயன்படுத்தினர் என்று இப்பாடல் வரிகளின் வெளியேயும் அறிய முடிகின்றது.

அழல் புரிந்த அடர் தாமரை
ஐதடர்ந்த நூற் பெய்து
புனை வினைப் பொலிந்த பொலன் நறுந்தெரியல்
பாறு மயிர் இருந்தலை பொலியச் சூடி
பலன் முற்றுக, நின் நாள் மகிழ் இருக்கை
(புறம். 29: 1-5)

மண் சிற்பம்

ஒல்லையூர் கிழான் மகனான பெருஞ்சாத்தான் இளமையாக இருந்த காலத்தில் ஒரு சமயம் தொடித்தலை விழத்தண்டினார் என்னும் சான்றோர் அவனைக் காணச் சென்ற பொழுது, பெருஞ்சாத்தனூர் அவரை மிக்க அன்புடன் வரவேற்று, அன்புடன் பேசிக்கொண்டு இருக்கையில் வேறு பல சான்றோர்களும் அங்கே கூடியிருந்தனர். அச்சமயம் அவர்களுடைய இளமைக் காலகட்டத்தைப் பற்றிப் பேசுகையில் அவர்கள் சிறுவர்களாய் இருந்த பொழுது, மணலால் கெட்டியான பெண் உருவம் செய்து பூ மாலை அணிந்து மகிழ்ந்திருந்தோம் என்று அவர்கள் பாடிக்கொண்டிருப்பதன் வழியாக மண் சிற்பம் பற்றியக் குறிப்பு இப்பாடல் வரிகளின் வழியேயும் அறிய முடிகின்றது.

‘இனிநினைந்து இரக்கும் ஆகின்று திணி மணல்
செய்யுறு பாவைக்கு தொய்பூத் தைஇத்”
(புறம். 243: 1-2)

கரந்தைப் போர் செய்து மேம்பட்ட வீரன் ஒருவனைக் கல் நாட்டி ஆயர் சிறப்பு செய்ய அதனை அண்டர்நடுங்கல்லெனப் பாராட்டியதனால், இவரை அண்டர் நடுங்கல்லினார் என்றழைக்கின்றனர். இவர் பெயரை அடை நெடுங்கல்லியார் எனவும் அழைக்கின்றனர். வீரன் ஒருவன் போரில் உடல் முழுவதும் பகைவர்களால் அம்பெய்தப்பட்டு வைத்து விளையாடியப் பெண்கள் கூட்டம், வீரனுக்கு புண் ஆற்றினர் என்றும் புலவர் பாடியுள்ளார்.

உயிர் புறா படாசு அளவைத் தெறுவரத்

தெற்றிப் பாவை திணிமணல் அயரும்
மெண்தோள் மகளிர் நன்று புரப்ப (புறம். 28 : 9 -11.

மரச்சிற்பம்

மரத்தாலும் மெல்லிய கிளையாலும் மிக அழகிய பதுமைகள் செய்யப் பெற்றன. கோயில்களிலும், மாடங்களிலும் தேவ தேவியர் உருவங்கள் இருந்தன. சங்க காலத்தில் தேர்களில் உள்ள சிற்பங்கள் வியத்தகு வேலைப்பாடுகள் கொண்டு காட்சி அளித்தன. சிறந்த தேர்களை செய்யவல்ல தச்சர்களும் இருந்தனர். தேர்களில் அழகிய மரச்சிற்பங்கள் செதுக்கப்பட்டன. ஒரே பகலில் எட்டுத்தேர்களைச் செய்யவல்ல தச்சர்கள் தமிழகத்தில் சங்க காலத்தில் இருந்துள்ளனர். ஆகவே மரச்சிற்பங்கள் பற்றி இலக்கிய ஆதாரங்கள் இருந்து வந்தாலும், மரச்சிற்பங்கள் பற்றியக் குறிப்பு புறநானூற்றில் விரவிக் காணப்படுகின்றன. அவற்றினை இங்ஙனம் காண்போம்.

சோழர் குடிப்பிறந்த நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி ஆகிய இருவரும் தமக்குள் போரிடும் பொழுது, இருவரும் தங்களது குடிப்பெருமைக்கு போற்றத்தக்க மரத்தால் சிற்பவேலைக்கொண்ட நெடிய தேர்களை வைத்திருந்தனர் என்று கோவூர் கிழார் இப்பாடல் வரியின் வழியே கூறுகின்றார்.

‘குடிப்பொருள் அன்றுநும் செய்தி கொடித்தேர் " (புறம்.45 : 7)

அதியமான் நெடுமான் அஞ்சியின் படைவீரத்தைப் புகழ்ந்து ஔவை தொண்டைமானிடம் படைக்களத்தில் கூறும்பொழுது அதியனின் போர்த்திறத்தையும், உடல்வலிமையையும் மரச்சிற்பமான தேருக்கு உவமையாக ஔவை தொண்டைமானிடம் வருகின்றார். அதாவது ஒரு நாளைக்கு எட்டுத்தேர் செய்யும் திறமையுடைய தச்சன், ஒரு மாதம் முழுவதும் முயன்று செய்த ஒரு தேர்க்காலைப் போன்ற வலிமையும், அழகும் உடையவன் என்று ஔவைப்பாடுகையில் அழகு என்று பார்க்கும் பொழுது தேரில் செய்யப்பட்ட சிற்ப வேலைப்பாடு என்பது ‘இலைமறைக் காய்போல" புலவர் இப்பாடல் வரிகளின் வழியாக மரச்சிற்பம் பற்றிய குறிப்பு, இங்ஙனம் அறியமுடிகின்றது.

'கனம்புகல் ஓம்புமின் தெவ்வீர் போர் எதிர்ந்து
எம்முளும் உளன்ஒரு பொருநன் வைகல்
எண் தேர் செய்யும் தச்சன்
திங்கல் வலித்த கால்அன் னோனே"
(புறம்.87 : 1-4)

இவ்வாறாக மரச்சிற்பமான தேர்களைப்பற்றி புறநானூற்று இலக்கியத்தில் பல்வேறுபட்ட சூழல்களில் புலவர்கள் தங்களது பாடல்களின் வழியாக வெளிப்படுத்தியுள்ளனர் .

கற்சிற்பம்

மனிதனுடைய மகத்தான கலை ஆற்றலை உணர்த்துவது சிற்பக்கலையாகும். சங்க இலக்கியத்தில் சிற்பக்கலை நல்ல வளர்ச்சிப் பெற்றுள்ளது என்பது புறநானூறு இலக்கியத்தின் வழியாக அறியமுடிகின்றது. இதனில் கற்சிற்பம் என்பது தனித்தன்மை வாய்ந்ததாகும். இதற்கு பல்லவர்களுடைய காலக்கட்டத்தில் வடிவமைக்கப்பட்ட பாறைச்சிற்பங்கள் ஓர் ஆதாரமாகக் கொள்ளலாம். எனவே பாறைகளிலும், கோயில்களிலும் வடிவமைக்கப்பட்ட சிற்பங்களை கற்சிற்பம் என்று சொல்லுவது பொருத்தமுடையதாக இருக்கலாம். சங்க காலத்தில் கற்சிற்பம் வடிவமைக்கப்பட்டன என்பதை இப்புறநானூறு இலக்கியத்தின் வழியாக காண்போம்.


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

சோழ இனத்துள் ஒருசிலரை மலையமான் சோழிய வேணாதி என்ற சோழ மன்னனை, மாறோக்கத்து நப்பசலையார் என்னும் புலவர் புகழ்ந்துப் பாடுகையில் இம்மன்னனது கோட்டையின் மதிற்சுவரினைச் சிறப்பித்துப்பாடுகையில் கோட்டையின் மதிற்சுவரினில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது என்று புலவர் பாடியுள்ளார்.

'விடர்ப்புலி பொறித்த கோட்டைச் சுடர்பூண்"

(புறம், 174 : 17 )

நடுகற்சிற்பம்

போரில் விழுப்புண் பட்டு வீரமரணம் அடைந்த வீரனுடைய உருவத்தைக் கல்லில் செதுக்கி அவனுடைய பீடும் பெயரும் பொறித்தனர் என்று தொல்காப்பியம் குறிப்பிலிருந்து சிற்பக்கலையின் தொன்மையினை அறியமுடிகின்றது. இவ்வகையில் சிற்பக்கலைக்கு தொடக்கமான நடுகற்கள் பற்றி புறநானூறு இலக்கியம் பல இடங்களில் புலவர்களால் பாடப்பட்டுள்ளது. அவைகளை கீழ்வருமாறு காண்போம்.

கோப்பெருஞ்சோழன் வடக்குப்பகுதிகளை தலைமை இடமாகக் கொண்டு ஆட்சிப்புரிந்து வந்தான். பிறகு இவன் வடக்கிலிருந்து உயிர் துறந்தான் என்று கூறுகின்றனர். கொடை நலமும், அன்புள்ளமும் கொண்ட கோப்பெருஞ்சோழனுடைய உயிர் பிரிந்து நடுகல்லாகக் காரணமாக எமனுடன் சண்டைக்குப்போவாம் என்று மன்னன் பிரிவால் பொந்தியார் மனம் வருந்திப்பாடுகையில் நடுகற் சிற்பம் பற்றிய குறிப்பு இப்பாடல் வரிகளின் வழியேயும் அறிய முடிகின்றது.

கெடுவில் நல்லிசை சூடி

நடுகல்ஆயினன் புரவலன் எனவே

(புறம்: 221:12-13)

கோப்பெருஞ்சோழன் தனது ஆட்சியினை செம்மையுற நடத்தியவன். பொத்தியார் என்னும் புலவர் அவைக்களத்தில் சிறந்து விளங்கியவர். கோப்பெருஞ்சோழனது இறப்பானது புலவருக்கு மிகவும் வருத்தத்தை கொடுத்ததன் வழியாக மன்னனது நடுகற் சிற்பத்தைப் பார்த்து நீ வாழும் பொழுது பலருக்கு நிழல் போல இருந்து தானங்கள் கொடுத்து அன்புக்காட்டினாய். அதோடு உலகம் போற்றும் உயர்ந்த புகழுடையனவாய் இருந்தாய். ஆனால் இன்று இறந்து நடுகல்லாய் நிற்கும் இந்த நிலையிலும் எனக்கு இடம் காட்டி அருள் செய்கின்றாய் என்று பொத்தியார் பாடியுள்ளார்.

பலர்க்கு நிழலாகி உலகம் மீக்கூறித்

தலைப் போகன்மையின் சிறுவழி மடங்கி

நிலைபெறு நடுகல் ஆசியக் கண்ணும்

(புறம்.223:1-3)

இப்பாடல் வரிகளின் வழியே நடுகற்சிற்பம் பற்றி அறியமுடிகின்றது.

அதியமான் குறுநில மன்னர்களுள் தலைசிறந்தவன். இவன் தகடூர் என்னும் முதன்மை இடமாகக் கொண்டு ஆட்சிப்புரிந்தவன். அதியமான் இறந்ததும் தமிழர் மரபுப்படி மன்னனுக்கு நடுகல் வைத்தனர். அதியனிடம் நெருங்கிய நட்புக்கொண்டிருந்த ஔவை என்ற பெண்பாற்புலவர் மக்கள் அதியனது நடுகல்லுக்கு புகழ்பெருமைகளை எழுதி, மயில் தோகை அணிவித்து, சிறு பாத்திரத்தில் நார்கொண்டு வடிகட்டிய தேனை வைத்துப் படைக்கின்றனர். இதனைக் கண்டு பிறரிடம் எதையும் பெற விரும்பாத வள்ளல் அதியன்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

இவர்கள் படைக்கும் தேனை ஏற்றுக்கொள்வானோ என்று ஔவைப் பாடல் வரியின் வழியேயும் நடுகற் சிற்பம் பற்றி அறிய முடிகின்றது.

'நடுகல் பீலிகட்டி நார் அரி
சிறுகலத்து உருப்பவும் கொள்வன் கொல்லோ
(புறம்.232 : 5-6)

ஒரு கால் பகைவர்கள் தன்னூர் ஆணிறைகளைக் கவர்ந்து சென்றதை அறிந்த பிறகு அதன் பின்னே சென்று அப்பகைவரை வென்று நிரைகளை மீட்டுக்கொண்டு ஊரில் உள்ள மக்களிடையே உயர்ந்தான் ஒரு தலைமகன். அத்தகைய தலைவன் இறந்ததும் ஊர் மக்கள் அனைவரும் கூடி தலைவனுக்கு நடுகல் செய்தனர். அதன் பின்னர் நடுகல்லிற்கு கீழ் அவனது பெயர் பொறிக்கப்பட்டு மயிலினது இறகினைச் சூட்டி சிறப்புச் செய்தனர் என்று வடமோசியார் பாடியுள்ளார்.

'மடம்சால் மஞ்சை அணிமயிர் சூட்டி
இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படம்பெய் பந்தர்க் கல்மிகை அதுவே"
(புறம். 260:25-28)

இப்பாடல் வரிகளின் வழியே நடுகற்சிற்பம் அறியமுடிகின்றது.

**முடிவுரை**

பழங்கால மனிதன் தான் கண்ட இயற்கைக் காட்சிகளைத் தன்னிடம் இருந்த பொருட்களில் வரைய அல்லது எழுத முற்பட்டதன் வழியாகச் சிற்பக்கலை தோன்றியிருக்கலாம். நுண்கலைகளுள் முதன்மையாக அமையும் கட்டடக்கலையுடன் நெருங்கிய தொடர்புடையது சிற்பக்கலை.

சிற்பக்கலை செய்வதற்குப் பத்துவகையான பொருள்கள் பயன்பட்டதை திவாகர நிகண்டு என்னும் பழம்பெரும் இலக்கண நூல் வரையறை செய்துள்ளது தொல்காப்பியம். சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள், சிற்பக்கலையைப் பற்றி தெளிவாக பேசியுள்ளது.

பழந்தமிழர் தாங்கள் பயன்படுத்திய போர்கருவிகளிலும் ஆபரணங்களிலும், நடுகற்களிலும், மதிற்சுவர்களிலும், அரசர்கள் பயன்படுத்திய தேர்களிலும் சிற்பங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. மண்ணால் பெண் சிற்பங்கள் செய்து பழந்தமிழர் மகிழ்ந்திருந்தனர்.

மூவேந்தர்கள் அனைவரும் போர் செய்வதில் திறமைமிக்கவர்கள். இவர்கள் போர் செய்து வெற்றி பெற்ற இடமெல்லாம் தங்களது நாட்டின் சின்னத்தைப் பொறித்துள்ளனர். குறிப்பாகச் சோழர்கள் இக்கலையில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர் என்பதையும் நடுகற் தோற்றமே சிற்பக்கலைக்குத் துணை நின்றது என்பதை இதன் வழியே அறியமுடிகின்றது. புறநானூற்றுப்பாடல்களில் நடுகல்லிற்கு முக்கியத்துவம் கொடுத்து புலவர்களால் பாடியுள்ளதை இக்கட்டுரை தெளிவாக விளக்குகிறது.

**துணைநூற்பட்டியல்**

இராசமாணிக்கனார், ம. தமிழ்க்கலைகள்,பாரி நிலையம், சென்னை

இராமசாமி, துளசி,தமிழ்ப்பண்பாட்டு மரபுக் கலைகள்,விழிகள் பதிப்பகம்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை.

கோதண்டராமன், பி.தமிழகத்துக் கலைகள்மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்,மதுரை.